VISIT…

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

அன்புடைய பெற்றோர்களே,

உலக வாழ்க்கையில் உண்மையான சொத்து என்று அறிஞர்கள் கூறுவது ஒருவருடைய ஒழுக்கத்தைத்தான். மனிதன் தன் பையை பணத்தால் நிரப்புவதற்கு ஆசைப்படுவதைப்போல, மனத்தை நல்ல பண்புகளால் நிரப்புவதற்கும் ஆசைப்பட வேண்டும். எத்தகைய துன்பம் ஏற்பட்டாலும் ஒழுக்கத்தை விடாமல் பின்பற்றுபவர்களை உலகம் போற்றும்.

இத்தகைய ஒழுக்க நெறிகளை இளவயது முதற்கொண்டே பழக்கத்தில் கொண்டு வருதல் அவசியம். குழந்தைகளை புத்திசாலிகளாக வளர்ப்பதோடு, ஒழக்கமானவர்களாகவும் வளர்ப்பது நாட்டுக்கும் வீட்டிற்கும் நல்லது. மக்களுக்குத் தேவையான ஒழுக்கத்தை வளர்ப்பதில் இலக்கியங்கள் பெரும்பங்கு ஆற்றுகின்றன.

குழந்தைகளுக்கு சிறுவயது முதலே நல்ல கருத்துக்களை மனதில் பதித்து விட்டால், அவர்கள் நல்லவர்களாக வளர்வார்கள், இதனால் நல்ல சமுதாயம் உருவாகும். நேர்மை கலந்த அறிவு, எச்சரிக்கை கலந்த ஏமாறாத அன்பு, பணிவோடு கலந்த திறமை ஆகியவற்றை குழந்தைகளுக்குக் கற்றுத்தர இலக்கியங்கள் மிகச் சிறந்த வழிகாட்டிகள்.

இளமையில் கல் என்று கூறப்படுவதற்கு ஏற்ப, குழந்தைகளின் மனதில் விதைக்கப்படுகின்ற ஒரு நல்ல பண்பு , ஆயிரம் நற்பண்புகளுக்கு அடித்தளமாக அமைகிறது.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்த மோகன்தாஸ் என்ற சிறுவன், பொய் சொல்லக்கூடாது என்ற அறிவுரையைக் கடைப்பிடித்த காணரத்தினால், உலகம் போற்றும் உத்தமராக, மகாத்மாவாக மாற்றம் அடைந்ததை சரித்திரம் காட்டுகிறது.

இலக்கியத்தின் மதிப்பை அறிந்த காரணத்தினால்தான் எனது குழந்தைகளுக்கு தினமும் ஒருமணிநேரம் இலக்கியத்தை சொல்லிக் கொடுத்திருந்தால் அவர்களுக்கு மிகச் சிறந்த படிப்பை அளித்திருப்பேன் என்று சொன்னார் மகாத்மா காந்தியடிகள்.

குழந்தைகளின் மனதைப் பண்படுத்த இலக்கியங்கள் உதவுவதை அறிந்ததால் தான் எதிர்கால சமுதாயத்தின் மீது அக்கறை கொண்ட எழுத்தாளர்கள் ஒழுக்கநெறி போதிக்கும் கதைகளை எழுதி வருகின்றனர்.

அந்த வகையில் தான் இந்தக் கதையும் எழுதப்பட்டுள்ளது. இ கதைகளை பெற்றோர்களே நீங்கள் படித்து உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள். இதனால் பிள்ளைகளுக்கு நல்ல ஒழுக்கத்தின்மீது பற்று உண்டாகும். உங்களுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கின்ற உறவும் பலப்படும். ஏன் என்றால் பிள்ளைகளுக்கு கதை சொல்லும் நேரம் என்பது வாழ்வின் மிகப்பயனுள்ள நேரம். அந்த நேரம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

கட்டைவிரல் அழகியும் பச்சைத் தேரையும்

ஒரு கிராமத்தில் வயதான தம்பதிகள் வசித்து வந்தனர். அவர்களுக்குத் திருமணம் ஆகி இருபது வருடங்கள் ஆனபோதிலும் ஒரு குழந்தை கூட பிறக்கவில்லை. பிள்ளையில்லாத குறையினால் அவர்கள் மிகுந்த வருத்தத்துடன் காலத்தை கழித்து வந்தனர்.

ஒரு நாள் அவர்களது கனவில் தோன்றிய தேவதை விரைவில் அவர்களுக்கு குழந்தை பிறக்கும் என்று தெரிவித்தது.

மறுநாள் காலையில் ஒரு நீலக்கிளி அவர்கள் வீட்டு வாசலில் ஒரு சோளக்கதிரை போட்டுவிட்டுப் போனது.

அவர்கள் அந்த சோளக்கதிரை எடுத்து சின்னச் சின்னத் தொட்டிகளில் ஒவ்வொரு விதையாக விதைத்தனர். இரண்டு மாதங்களில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சோளக்கதிர்கள் ஆளுயரத்திற்கு வளர்ந்தன. ஒரே ஒரு கதிர் மட்டும் வித்தியாசமாக சற்று பளபளப்போடு காணப்பட்டது.

அந்தக் கதிரை பிரித்து பார்த்தனர். என்ன ஆச்சரியம் அதற்குள் கட்டைவிரல் அளவிலான ஒரு பெண் குழந்தை இருந்தது.

குழந்தை கிடைத்ததே என்று அவர்கள் சந்தோஷப்பட்டனர். இருந்தாலும் அது சாதாரணக் குழந்தைபோல இல்லாமல், ஒரு கட்டைவிரலின் அளவிற்கே இருப்பதால் வருத்தமும் அடைந்தனர். எப்படி இருந்தபோதிலும் கடவுள் கொடுத்த குழந்தையாகவே அதைக் கருதினர். அவளுக்கு கட்டைவிரல் அழகி என்று பெயரிட்டு சீராட்டி பாராட்டி வளர்த்தனர்.

அந்தக் குழந்தைக்கு பெரிய பாதாம் கொட்டையின் ஓடு ஒன்றை எடுத்து சுத்தம் செய்து அழகான வீடாக அமைத்து விட்டனர். நீலமலரின் இதழ்களை படுக்கையாக அமைத்தனர் . ஒரு வெள்ளித் தட்டில் நிரைய நீர் ஊற்றி, ஒரு தாமரையிலையை வைத்து அதன் மீது அந்தப் பெண்ணை காலை நேரங்களில் வைத்திருந்தனர் அவளது பெற்றோர்.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

அந்தப் பெண் தாமரையிலையில் எப்போதும் உட்கார்ந்திருப்பாள். மிக அழகான தேவதையைப் போல காணப்பட்ட அவளுக்கு அந்த இலையே மிதக்கும் படகுவீடு. ஒரு தாமரை இதழை குடையாகப் பிடித்து சூரிய வெப்பத்தில் இருந்து தன்னை அவள் காத்துக் கொள்வாள். மழை பெய்யும் போது தாமரை பூவுக்குள் இறங்கி கதகதப்பாக உட்கார்ந்து கொள்வாள்.

பாடும் பறவைகள் அவள் அழகைப் புகழ்ந்து பாடும். வெட்டுக் கிளிகள் கூட அவளை இமைகொட்டாமல் பார்த்து பரவசம் அடையும். மிக அழகான பல வண்ணங்களைக் கொண்ட வண்ணத்துப் பூச்சிகள் அவளைச் சுற்றிச்சுற்றி வந்து தங்கள் அன்பை வெளிப்படுத்தும். தேனீக்கள் அன்போடும் பாசத்தோடும் கட்டைவிரல் அழகிக்கு மலர்களில் இருந்து புத்தம் புதிய தேன்துளிகளைக் கொண்டு வந்து தரும். இப்படியாக அவள் மகாராணியைப்போல இயற்கையின் தோட்டத்தில் மிகவும் சந்தோஷத்தோடு வாழ்ந்து வந்தாள்.

கட்டைவிரல் அழகி வசித்த வீட்டிற்கு மிக அருகில் ஒரு அருவி ஓடியது. அதன் சேற்றுப்பகுதிக் கரையின் மீது ஒரு தேரைக்குடும்பம் வசித்து வந்தது. தாய் தேரை ஒரு நாள் ஜன்னல் வழியாக வீட்டிற்குள் குதித்தது. மேசை மீது வெள்ளித் தட்டில் தாமரையிலையின் மீது தேவதைபோல அமர்ந்திருக்கும் அழகியைப் பார்த்தது. உடனே அதன் கருமையான பளபளக்கும் விழிகள் ஆச்சரியத்தினால் விரிந்தன.

" அடடா இந்தப் பெண் தேவதையைப் போல எவ்வளவு அழகாக இருக்கிறாள். இவளை என் மகனுக்கு மனைவியாக்கிக் கொள்ளவேண்டும் " என்று எண்ணியது. உடனே கிராக் கிராக் என்று சத்தம் போட்டு தன் மகனை அழைத்தது.

கன்னங்கரேல் என்று அசிங்கமான வடிவத்தோடு அதன் தேரைமகன் " என்ன அம்மா " என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்து குதித்தது.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

கட்டைவிரல் அழகியை சுட்டிக் காட்டிய அம்மா தேரை, ஜடேய் அதோ பார் அவளைத் தான் உனக்கு மனைவியாக்க முடிவு செய்திருக்கிறேன். பெண்ணை நன்றாகப் பார்த்துக் கொள் ” என்று சொல்லியது.

கட்டைவிரல் அழகியைப் பார்த்த தேரைமகனுக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. இப்படிப்பட்ட அழகி தனக்கு மனைவியா ? என்று சந்தேகம் கொண்டது.

ஒ ஒஇவள் தான் உன் மனைவி, அந்த தாமரை இலையோடு அவளை தூக்கிக் கொண்டு நம் வீட்டிற்குச் செல்வோம் வா ” என்று சொல்லிவிட்டு, மேசை மீது தாவியது.

அதைத் தொடர்ந்து தேரைமகனும் தாவியது. இரண்டுமாகச் சேர்ந்து கட்டைவிரல் அழகியை தாமரையிலையோடு சேர்த்துத் தூக்கிக் கொண்டு தோட்டத்தில் ஓடும் கால்வாயை அடைந்தன.

ஓடும் நீரில் தாமரையிலையை வைத்த பிறகு அவைகள் சுற்றி வந்து தாவித்தாவி கட்டைவிரல் அழகியை ரசித்தன.

ஒ ஜடேய் பையா, இன்னும் சிறிது நேரத்தில் உனக்கும் இவளுக்கும் திருமணம். நான் நமது உறவினர்களை போய் அழைத்துக் கொண்டு வருகிறேன். அதுவரையில் இவளை பத்திரமாகப் பார்த்துக் கொள் ” என்று சொல்லிவிட்டு தாய்த்தேரை தண்ணீரில் முழுகியது.

வழுவழுப்பான உடலும், கரிய நிறமும், சேறுபடிந்த மேனியும் கொண்ட அருவெறுப்பான தேரையை திருமணம் செய்து கொள்ள எந்தப் பெண்ணுக்குத்தான் பிடிக்கும். தனக்கு நேர்ந்த துரதிருஷ்டத்தை எண்ணி கட்டைவிரல் அழகி அழ ஆரம்பித்தாள்.

அதைத் தவிர அவளால் செய்யக்கூடியது எதுவும் இல்லை.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

தேரை அந்த கால்வாயில் வசிக்கும் நண்டு, நத்தை, மீன்கள் ஆகிய எல்லாவற்றிடமும் தன் மகனுக்கும் கட்டைவிரல் அழகிக்கும் திருமணம் நடக்கப்போவதை பெருமையாக சொல்லிக் கொண்டது.

அழகான குட்டி மீன்கள் கல்யாணப்பெண்ணைப் பார்க்கும் ஆவலில் நீர் மட்டத்திற்கு வந்தன. தாமரை இலைமீது அமர்ந்திருக்கும் அழகான பெண்ணைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தன.

"இந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள் ? " என்று வாயைப் பிளந்தது ஒரு பெண்மீன்.

"அவள் நிறம் எலுமிச்சை போல அழகாக இருக்கிறது "

"அவள் கன்னம் ஆப்பிள் போல சிவப்பாக இருக்கிறது "

"அவை கண்களா ? இல்லை இல்லை குட்டி கோலிக்குண்டுகள் "

"இது பெண்ணா ? இல்லை மலர்க்குவியலா ? "

என்றெல்லாம் அவைகள் தங்களுக்குள் பேசிக்கொண்டன. அப்போது ஒரு மூத்த மீன், "கட்டைவிரல் அழகியைப் பார்த்து, "உனக்கு இந்த திருமணத்தில் சம்மதமா ? இவ்வளவு அழகுப்பெண்ணான நீ, அந்த அசிங்கமான தேரைப்பையனை கலியாணம் செய்து கொள்ள எப்படிச் சம்மதித்தாய் ? " என்று கேட்டது.

பதில் சொல்லாமல், கட்டைவிரல் அழகி அழுது கொண்டே இருந்தாள்.

அதைப் பார்த்ததுமே மீன்களுக்கு, தேரையை மணந்து கொள்ள அழகிக்கு சம்மதம் இல்லை என்று அவைகள் புரிந்து கொண்டன. எப்படியாவது அவளுக்கு உதவி செய்ய வீரும்பின. தங்களுக்குள் கலந்து பேசின. பிறகு எல்லா மீன்களும் சேர்ந்து தேரைப்பையனை அந்த இடத்தில் இருந்து விரட்டிவிட்டு, தாமரை இலையைக் கட்டியிருந்த தாமரைத்தண்டினைத் துண்டித்தன.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

நீரின் வேகத்தினால் தாமரை இலை வேகமாக செல்ல ஆரம்பித்தது. தான் திருமணத் செய்து கொள்ளவேண்டிய பெண், படகில் ஏறிச் செல்வதைப்போல போவதைப் பார்த்து தேரை கிராக் கிராக் என்று கத்தி அலறியது. அதனால் தாவிச் சென்று அவளைப் பிடித்து வர முடியவில்லை.

கட்டைவிரல் அழகி மீன்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தாமரையிலையில் உட்கார்ந்தபடியே அந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட்டாள். மீன்கள் சந்தோஷத்தோடு தண்ணீருக்குள் மூழ்கின.

இலைப்படகு மிதந்து கொண்டே வெகு தொலைவு சென்றது. கரையின் இரண்டு பக்கங்களிலும் ஏராளமான மலர்கள் பூத்திருந்த இடத்தில் ஒரு அழகான வண்ணத்துப் பூச்சி கட்டைவிரல் அழகியைப் பார்த்துவிட்டு, அவளைச் சுற்றி சுற்றிவந்து பறந்தது.

மிரட்சி பொருந்திய கண்களால் கட்டைவிரல் அழகி அந்த வண்ணத்துப்பூச்சியைப் பார்த்து சந்தோஷப்பட்டாள்.

அந்த வண்ணத்துப்பூச்சி மெதுவாக வந்து அவள் தோளில் உட்கார்ந்தது. அதன் கனத்தை தாங்க முடியாமல் அவள் தோளைக்குலுக்கினாள். மெதுவாக முனகினாள். அது அவளது கஷ்டத்தை உணர்ந்தது, சரேல் என்று சிறகை விரித்துப் பறந்தது.

கட்டைவிரல் அழகி தன் தலையில் கட்டியிருந்த ரிப்பனை எடுத்து அதன் ஒரு முனையை வண்ணத்துப்பூச்சியின் கழுத்தில் கட்டினாள். ரிப்பனின் மறுமுனையை தாமரையிலையின் காம்புடன் சேர்த்துக் கட்டினாள்.

இதனால் வண்ணத்துப்பூச்சியின் பறக்கும் வேகத்திற்கு ஏற்றார்போல தாமரையிலையும் வேகமாக தண்ணீரின் மீது நகர்ந்தது. இலைப்படகின் வேகத்தை ரசித்தபடியே கட்டைவீரல் அழகி உட்கார்ந்திருந்தாள்.

அப்போது ஙொய் என்று ரீங்காரம் செய்தபடியே ஒரு பெரிய பொன்வண்டு அந்த இடத்திற்குப் பறந்து வந்தது.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

அது தாமரையிலையில் பயணம் செய்யும் கட்டைவிரல் அழகியைப் பார்த்தது. அத்தனை அழகான பெண்ணை பார்த்ததும் அது அவளை மணந்து கொள்ள வீரும்பியது. எனவே நேராக வந்து தன் கால்களினால் கட்டைவிரல் அழகி லபக்கென்று பற்றி எடுத்துக் கொண்டு மரத்தை நோக்கிச் சென்றது.

இதை சற்றும் எதிர்பார்க்காத கட்டைவிரல் அழகி அலறினாள். துடித்தாள்.

ஆனால் அவளது கதறலை சற்றும் பொருட்படுத்தாமல் பொன்வண்டு, அவளை மிகப்பெரிய காட்டுப்பூவில் கொண்டு போய் இறக்கி வைத்தது.

உடனே ஏராளமான பொன்வண்டுகளும், கருவண்டுகளும் அழகியைச் சூழ்ந்து கொண்டன.

"இது நம் வண்டு இனத்தை சேர்ந்தாகத் தெரியவில்லையே ? "

"வண்டு தான் ஆனால் இரண்டு கால்கள் தான் இருக்கின்றன "

"வண்டு இல்லை, வண்டாக இருந்தால் உறிஞ்சு குழல் இருக்குமே "

"ஆமாம் இதற்கு இறக்கைகளும் இல்லை, அழகாகவும் இல்லை "

என்று அவைகள் தங்களுக்குள் பேசிக்கொண்டன. அப்போது ஒரு பெண்வண்டு "இந்த "அழகில்லாத வஸ்துவை நீ எதற்காகத் தூக்கி வந்தாய்? " என்று பொன்வண்டைப் பார்த்து கேட்டது.

அப்போது தான் பொன்வண்டுக்கு அது தங்கள் இனம் இல்லை என்பது புரிந்தது. "ஆமாம் அழகாகவும் இல்லை, பறக்கவும் முடியாத இந்த கட்டைவிரல் பெண் எனக்குத் தேவையில்லை " என்று சொல்லிய அது, கட்டைவிரல் அழகியை மறுபடியும் தூக்கிவந்து கால்வாயின் கரையில் ஒரு புல்தரையில் இறக்கி விட்டது.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

கட்டைவிரல் அழகி மிகவும் வருத்தம் அடைந்தாள். பொன்வண்டுகளும், மற்ற வண்டுகளும் சேர்ந்து கொண்டு தன்னை அழகில்லாதவள் என்று சொல்லிவிட்டதே என்பதே அவள் வருத்தத்தின் காரணம்.

கட்டைவிரல் அழகி அந்த காட்டிலேயே பொழுதைக் கழிக்க ஆரம்பித்தாள். ஒரு பெரிய இலையை வெட்டி தனக்கு மிக அழகான கூடு ஒன்றை தைத்துக் கொண்டாள். அதை ஒரு செடியின் மற்றொரு பெரிய இலைக்குக்கீழே தொங்கும்படி அமைத்தாள். இப்போது அந்த இலைக்கூடு அவளுக்கு வீடாகியது. சுட்டெரிக்கும் சூரியனின் கொடிய வெப்பத்தில் இருந்து அவளைக் காத்தது. கட்டைவிரல் அழகி சிறிய பூக்களில் உற்பத்தியாகிய தேனைக்குடித்து பசி தீர்த்துக் கொண்டாள். விடியற்காலையில் தனது இலைக்கூட்டின் ஓரத்தில் ஒட்டியிருக்கும் பனித்துளிகளை குடித்து தாகம் போக்கிக் கொண்டாள். இவ்வாறாக அவள் கோடைகாலத்தை கழித்தாள்.

இப்போது சோதனையாக குளிர்காலம் வந்தது. இலைக்கூடு அவளுக்கு கதகதப்பை தரவில்லை. பலவிதமான செடிகளும்,பூக்களும் பனியினால் கருகி வாடிவிட்டன. எனவே கட்டைவிரல் அழகி தேன் இல்லாமல் பசியால் வாடினாள். நாளுக்கு நாள் குளிர் அவளை வாட்டி எடுத்தது. எலும்பு வரையில் துளைத்து எடுத்தது. அவள் முகத்தில் பனியினால் வெடிப்புக்கள் ஏற்பட்டன. உதடுகள் காய்ந்து பிளந்தன.

ஒரு நாள் அந்த இலைக்கூட்டின் பக்கமாக வயதான வயல்எலி ஒன்று வந்தது. கட்டைவிரல் அழகி படுகின்ற துன்பத்தை பார்த்த அது பரிதாபம் கொண்டது.

"சின்னப்பெண்ணே, நீ தொங்கும் இலைக்கூட்டில் இருந்தால் குளிரை வெல்ல முடியாது, சரியாகத் தூங்க முடியாது, என்னைப்போல பூமிக்கடியில் வளை தோண்டிக் கொண்டு இருந்தால் மட்டுமே இந்தக் குளிர்காலத்தை

சமாளிக்க முடியும் . என்னுடைய வளை மிகவும் கதகதப்பாக குளிருக்கு இதமாக இருக்கும் ” என்றது.

“ “எனக்கு வளை தோண்டத்தெரியாதே என்ன செய்வேன் ? ” என்று சொல்லி வருந்தினாள் கட்டைவிரல் அழகி. அவள் கண்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர் முத்துக்கள் உருண்டு சிதறின.

இதைப் பார்த்த வயல்எலியின் வயதான மனது இளகி விட்டது.

“உனக்கு வளை தோண்டத்தெரியாவிட்டால் என்ன ? நீ விரும்பினால் என்னுடைய வளையில் வந்து வசித்துக் கொள்ளலாம் ” என்றது.

அதற்கு சம்மதித்தாள் கட்டைவிரல் அழகி. வயல் எலி தனது வளைக்கு அவளை அழைத்துச் சென்றது.

ஓடைக்கரையில் இருந்த அந்த வளை மிகவும் சிறியதாக இருந்தது. “இதற்குள் என்னால் எப்படி இருக்க முடியும் ? ” என்றாள் கட்டைவிரல் அழகி.

“ “இந்த வளை உனக்குப் பிடிக்கவில்லை என்றால் எனது நண்பன் பெருச்சாளியின் வளை சற்றுப் பெரியதாக காற்றோட்டமாக இருக்கும். நீ விரும்பினால் நான் உன்னை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன் ” என்றது வயல்எலி.

கட்டைவிரல் அழகி அதற்குச் சம்மதித்தாள்.

“எனது நண்பன் பெருச்சாளி மிகவும் நல்லவன், அவனது வீடு மிகப்பெரியது. அவன் ஒரு வருடத்திற்குத் தேவையான சோளத்தை சேர்த்து வைத்திருக்கிறான். இன்னும் அவனுக்குத் திருமணம் ஆகவில்லை. நல்ல பெண்ணாகத் தேடிக்கொண்டிருக்கிறான் ” என்று வயல்எலி தன் நண்பனைப்பற்றியே கட்டைவிரல் அழகியிடம் பேசியபடி வந்தது. அவள் பதில்

எதுவும் சொல்லாமல் வயல்எலியின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு வந்தாள்.

அவர்கள் இருவரும் பெருச்சாளியின் வளையை அடைந்தனர். தனது நண்பன் வயல் எலியையும், கட்டைவிரல் அழகியையும் பெருச்சாளி மிக மரியாதையோடு வரவேற்றது. அவர்கள் இருவருக்கும் திராட்சை பழங்களை கொண்டு வந்து கொடுத்தது.

கட்டைவிரல் அழகியை பார்த்த உடனேயே அதற்கு மிகவும் பிடித்து விட்டது. எனவே அவளிடம் ”இனிமேல் குளிர்காலத்தைப் பற்றி வருந்தத்தேவையில்லை. எனது வீட்டிலேயே தங்கிக்கொள். இங்கே தேவையான அளவிற்கு உணவுப்பொருட்கள் இருக்கின்றன. குளிர்காலம் முடிந்ததும் உனக்கு மிக அழகான வீடு ஒன்றை கட்டித் தருகிறேன். நீ விரும்பினால் என்னுடனேயே இங்கேயே தங்கிக் கொள்ளலாம் ” என்று அன்பாகப் பேசியது.

கட்டைவிரல் அழகி அந்த வளையில் தங்குவதற்கு சம்மதித்தாள்.

பெருச்சாளி தன் வளையை நீண்ட தொலைவிற்கு குடைந்து வைத்திருந்தது. அது வளைக்குள் வெளிச்சம் வருவதற்காக சில மின்மினிப்பூச்சிகளை பிடித்து வந்து களிமண்ணில் அவைகளை உயிரோடு ஒட்டிவைத்திருந்தது. அந்த வெளிச்சத்தில் கட்டைவிரல் அழகி வளைக்குள் நீண்ட தொலைவு நடப்பது வழக்கம்.

ஓவ்வொரு நாளும் பெருச்சாளி அழுகிப்போன பழங்களை சாப்பிட்டு விட்டு, சேற்றில் புரண்டு விட்டு வரும். நாற்றம் சகிக்க முடியாததாக இருக்கும். அதோடு பெருச்சாளி எப்போதும், இருட்டு, தீனி இந்த இரண்டைப்பற்றியே பேசும்.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

கட்டைவிரல் அழகிக்கு சூரியனின் வெளிச்சமும், மலர்களின் வாசனையும், பறவைகளின் பாட்டொலியும் கேட்காமல் வளைக்குள் கைதியைப்போல அடைந்து கிடக்கும் வாழ்க்கை இரண்டு நாட்களிலேயே கசந்து விட்டது.

மறுநாள் அவளைப்பார்ப்பதற்காக வயல்எலி வந்தது.

"சின்னப்பெண்ணே சந்தோஷமாக இருக்கிறாயா ? " என்று கேட்டது வயல்எலி.

" "இங்கே சந்தோஷம் இல்லை, ஆனால் வேளாவேளைக்கு நல்ல உணவும், பாதுகாப்பும் கிடைக்கிறது. அது மட்டும் போதுமா ? " என்றாள் கட்டைவிரல் அழகி.

" "பசிக்கும்போது நல்ல சாப்பாடும், பாதுகாப்பான இடமும் இருந்தால் வாழ்க்கை இன்பமாக இருக்குமே. அதைத் தவிர வேறு என்ன வேண்டும் ? " என்றது வயல்எலி சற்று எரிச்சலோடு.

"" "சில பேருக்கு அது மட்டும் போதும், ஆனால் எனக்கு அந்த வாழ்க்கை சலிப்பை ஏற்படுத்துகிறது " என்றாள் கட்டைவிரல் அழகி.

"என்னவோ சொல்கிறாய் எனக்குப் புரியவில்லை. உனக்கு இந்த அறை சலிப்பை ஏற்படுத்தினால் இன்னும் கொஞ்சம் தொலைவு சென்றால் ஒரு குகைவழி இருக்கிறது. அது பனிக்காலத்தில் மேலே உள்ள தண்ணீர் பரப்பு குளிர்ச்சி அடைந்து பனிக்கட்டியானதால் ஏற்பட்டது. அந்த வழியாக சிறிது தொலைவு நீ காலையிலும் மாலையிலும் நடக்கலாம். மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கும். சூரிய வெளிச்சம் பனிப்பாளங்களில் ஊடுருவி ஏற்படுத்தும் மாயாஜாலங்களை, கற்பனை செய்ய முடியாத வர்ணக் கலவைகளை நீ ரசிப்பாய் என்றே நான் நினைக்கிறேன். எனக்கு அதற்கெல்லாம் நேரம் இல்லை " என்று சொல்லிவிட்டு வயல்எலி புறப்பட்டு விட்டது.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

மறுநாள் காலையில் முதல்வேலையாக கட்டைவிரல் அழகி, வயல்எலி சொன்ன குகைவழியை தேடிக் கண்டு பிடித்தாள். அது சொன்னது உண்மைதான். அந்த வழியில் ஒரு பெருச்சாளி நன்றாக நுழைந்து செல்ல முடியும். பனியின் குளிர்ச்சியால் மேலே உள்ள தண்ணீர் உறைந்து போய் கெட்டியாகி இருந்தது. கீழே போதிய வெளிச்சம் வந்தது. சூரிய வெளிச்சம் பனிக்கட்டியில் ஊடுருவி இறங்கும் போது அதன் கிரணங்கள் சிவப்பு பச்சை நீலம் என்று பலவிதமான வண்ணங்களை உண்டாக்கி, குகைக்குள்ளே வானவில் நிறங்களை அள்ளித் தெளித்து இருந்தது.

அந்த அழகான காட்சிகளை பார்த்துக் கொண்டே கட்டைவீரல் அழகி நடந்தாள். ஒரு இடத்தில் குகையின் மேல்சுவர் சற்று மெல்லியதாக இருப்பதை அறிந்தாள். மெதுவாக ஒரு குச்சியை எடுத்து குத்தினாள். பனிப்படலம் விலகி, மண்தரை தெரிந்தது. தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள். புற்களும், செடிகொடிகளும், பலவிதமான நிறங்களில் வாசனைப் பூக்களும் தெரிந்தன. அந்தக் காட்சியைப் பார்த்து மனமகிழ்ச்சி அடைந்தாள் அவள்.

தினமும் காலையிலும், மாலையிலும் அவள் அந்த குகைக்குள் வந்து இயற்கை அழகை ரசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டாள்.

பெருச்சாளி ஒவ்வொரு நாளும் அவளுக்கு சோளக்கதிர், பழங்கள், இனிப்புக்கள் என்று விதம் விதமாக பரிசுப்பொருட்களை கொடுத்து தன்னை மணந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது.

அவள் பதில் சொல்லாமல் மவுனமாக இருந்தாள். அந்த இடத்தில் இருந்து எப்படியாவது தப்பி வெளி உலகுக்குச் சென்று விடவேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

ஒரு நாள் கட்டைவிரல் அழகி, பனிக்குகைவழியாக செல்லும் போது தான் இதுவரையில் செல்லாத வேறு ஒரு புதுவழி இருப்பதை பார்த்தாள். அந்த வழியாகச் சிறிது தொலைவு சென்றாள்.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

ஒரு மேடையின் மீது நீலக்குருவி ஒன்று சாய்ந்து படுத்திருப்பதைப் பார்த்தாள். மிக அழகான நீலக்குருவி அது. வானம்பாடியைப் போன்ற அது, இளவேனில் காலங்களில் கூவித்திரிவதை அவள் பலமுறை பார்த்திருக்கிறாள். அதன் இனிமையான குரலைக் கேட்டு அவள் மெய்மறந்து கண்மூடி ரசித்திருக்கிறாள். அந்த அழகான பறவை இப்போது பனிக்குகையில் கல்மேடையின் மீது படுத்திருக்கிறதே, என்ன காரணம் ? என்று அறியும் ஆர்வத்தோடு கட்டைவிரல் அழகி அருகே சென்று பார்த்தாள்.

நீலக்குருவியிடம் அசைவு எதுவும் இல்லை, அது பனியினால் உறைந்து அந்த இடத்தில் விழுந்திருந்தது.

கட்டைவிரல் அழகி தனது நடுங்கும் வீரல்களினால் குருவியை எடுத்து இரண்டு கைகளுக்கு இடையே மூடிக்கொண்டாள். அந்த சிறிய பறவையிடம் அசைவு எதுவும் இல்லை, அநேகமாக, இரக்கமற்ற பனியினால் அது இறந்து போயிருக்க வேண்டும் என்று குமுறியது அவள் இளநெஞ்சம்.

மன வருத்தத்தோடு தனது அறைக்குத் திரும்பினாள் கட்டைவிரல் அழகி. பெருச்சாளி அவளை வரவேற்றது. தனது வழக்கப்படி அது, இருட்டைப் பற்றியும், அழுகிப்போன பழங்களைப் பற்றியும் பேசியது.

பேச்சின் நடுவில் கட்டைவிரல் அழகி நீலக்குருவியைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

“ ஓ அதுவா, ஒரு நாள் அந்தக் குருவி பனியினால் உறைந்து போய் எனது குகைக்குள் வந்து விழுந்தது, போனால் போகிறது என்று அதன் உடலை எடுத்து எறியாமல் வைத்திருக்கிறேன்.அப்பப்பா சூரிய வெளிச்சத்தில் அந்தக் குருவி போடும் ஆட்டத்தையும், அதன் கத்தலையும் கேட்டாலே எனக்கு எரிச்சல் வரும் ” என்றது பெருச்சாளி.

Mail id : vennu_srinivasan@yahoo.com

அதன் ரசனையை எண்ணி வருத்தம் அடைந்தாள் கட்டைவிரல் அழகி. இப்படிப்பட்ட இருட்டில் வாழும் குருட்டுப்பிராணியை திருமணம் செய்து கொண்டு வாழும் அவலமான வாழ்க்கையை அவள் வெறுத்தாள்.

அதைவெளியே காட்டாமல் அமைதியாக நின்றாள்.

" இன்னும் இரண்டு நாட்களில் பனிக்காலம் முடிந்து விடும் , அதன் பிறகு நமது திருமணமத்தை வைத்துக் கொள்ளலாம் " என்று சொன்ன பெருச்சாளி, அவளிடம் ஒரு ஆப்பிள் பழத்தை கொடுத்து சாப்பிடச் சொல்லிவிட்டுச் சென்றது.

மறுநாள் காலையில் பனிக்குகைவழியாக நீலக்குருவி இருக்கும் இடத்தை அடைந்த கட்டைவிரல் அழகி அதை எடுத்து தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டு கதகதப்பு ஏற்படுத்தினாள்.

நேரம் ஆகிக் கொண்டிருந்தது. பறவை அசையும் என்று நம்பி வந்தாள் அவள். ஆனால் அது பொம்மைபோல படுத்திருந்தது. அவள் கண்களில் இருந்து வெளிப்பட்ட சூடான கண்ணீர்த்துளிகள் நீலக்குருவியின் மீது விழுந்து உருண்டன. கதகதப்பான தண்ணீர் பட்டதும் அந்தப் பறவை சற்றே அசைந்தது.

அதன் உடலில் இரத்த ஓட்டம் சீர்ப்பட்டது. இறகுகள் அசைந்தன, விழிகள் திறந்தன. அது தனது கால்களை நீட்டி சோம்பல் முறித்தது. இதைப் பார்த்த கட்டைவிரல் அழகி சந்தோஷக்கூச்சல் போட்டாள்.

நீலக்குருவி அவள் கைகளுக்குள் புரண்டு படுத்தது.

கட்டைவீரல் அழகியைப் பார்த்த நீலக்குருவி மெதுவாக எழுந்தது, தனது சிறகுகளை சடசடவென்று அடித்துக் கொண்டு விர்ரென்று பறந்து சென்று சற்றுத் தொலைவில் பனிமேடையின் மீது அமர்ந்தது.

" பெண்ணே, நீயார் ? பனியால் உறைந்து போன என்னை சாவின் பிடியில் இருந்து மீட்டு வந்திருக்கிறாய். மிக்க நன்றி " என்றது.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

“ “நீலக்குருவியே உனது இனிமையான பாடலை , இளவேனில் காலங்களில் பலமுறை கேட்டு பரவசம் அடைந்த இளம்பெண் நான். என்பெயர் கட்டைவிரல் அழகி என்பது. எனது பெற்றோரை விட்டுப்பிரிந்த நான், இப்போது குளிருக்குப் பயந்து ஒரு பெருச்சாளியின் இந்தக் குகையில் வசிக்கிறேன் ” என்று நடந்தவைகளை அதனிடம் சுருக்கமாகத் தெரிவித்தாள்.

“ “பட்டாம் பூச்சியைப்போல இயற்கையை ரசிக்கும் நீ, இருட்டில் வசிக்கும் பெருச்சாளியிடம் வந்திருப்பது ஆச்சரியம்தான் ” என்றது நீலப்பறவை.

பிறகு அது அவளைப் பார்த்து,“ இன்னும் இரண்டு நாட்களில் பனிக்காலம் முடிவடையும். வசந்த காலம் ஆரம்பமாகும். நான் எப்படியாவது இந்தக் குகைக்குள்ளே இருந்து தப்பி வெளி உலகிற்குச் செல்வேன். விரும்பினால் உன்னையும் அழைத்துச் செல்கிறேன் ” என்றது.

“ “ஆஹா தாரளமாக நான் உன்னுடன் வந்து விடுகிறேன். நமது திட்டம் பெருச்சாளிக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் அது என்னைத் தடுத்துவிடும். அதோடு நீ உயிரோடு இருப்பதை அது விரும்பாது ” என்றாள் கட்டைவிரல் அழகி.

“ “நான் இன்னும் இரண்டு நாட்கள் இந்த இடத்திலேயே செத்ததைப்போல கிடக்கிறேன். சரியான நேரத்தில் பனிப்பாறையை கொத்தி ஓட்டை ஏற்படுத்திக் கொண்டு வெளியே பறக்கிறேன் ” என்றது நீலக்குருவி.

“ “வெளியே செல்வதற்கான வழி ஏற்கெனவே தயாராக இருக்கிறது. நான் குகையின் மேல்கூரையில் பனியைக் குடைந்து ஏற்படுத்தி வைத்திருக்கிறேன். அதன் வழியாகத்தான் அவ்வப்போது இயற்கை காட்சிகளை ரசித்து வருகிறேன். நாம் அந்த வழியாகவே தப்பிச் செல்லலாம் ” என்றாள் கட்டைவிரல் அழகி.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

தனக்கு ஆதரவு கொடுத்து, இருப்பிடம் தந்து, பசிக்கு உணவு அளித்த பெருச்சாளியை விட்டுப்பிரிய அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் அதை திருமணம் செய்து கொண்டு அந்த இருட்டுவளைக்குள் தங்கி வாழ அவளால் நிச்சயம் முடியாது. எனவே போராடும் மனத்தோடு அவள் அன்று இரவைக் கழித்தாள்.

மறுநாள் காலையில் கட்டைவிரல் அழகி நீலக்குருவியுடன் வெளியே புறப்படத் தயாராக இருந்தாள்.

பெருச்சாளியும், அதன் நண்பன் வயல்எலியும் கட்டைவிரல் அழகியின் திருமணம் குறித்து மிகவும் உற்சாகமாகப் பேசியதை, வேண்டா வெறுப்பாக அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவைகள் இரண்டும் மிக சுவாரசியமாக பேசிக்கொண்டிருக்கும்போது, அவள் மெதுவாக அந்த இடத்தில் இருந்து நழுவினாள்.

பனிக்குகையை அடைந்து, நீலக்குருவியை எழுப்பினாள். அது சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்தது.

“என் முதுகின் மீது ஏறி உட்கார்ந்து கொள் ” என்றது.

கட்டைவிரல் அழகி மெதுவாக ஏறி நீலக்குருவியின் முதுகில் உட்கார்ந்து, அதன் கழுத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

அது சிறகடித்து காற்றில் பறந்தது, சிறிது தொலைவு சென்ற அது, “வெளியே செல்லும் வழி எங்கே இருக்கிறது ? ” என்று அவளிடம் கேட்டது.

அவள் “இங்கே இருந்து நேராகச் செல் ” என்று சொன்னாள்.

நீலக்குருவியின் சிறகடிக்கும் ஓசை கேட்டதும், வயல்எலி மூக்கை உயர்த்திப் பார்த்தது, பெருச்சாளி காதுகளை திருப்பி சத்தம் வந்த இடத்தை கவனித்தது. பிறகு ஒரே ஓட்டமாக அங்கே ஓடியது.

அப்போது அதன் கண்களில் நீலக்குருவியும், அதன் மீது உட்கார்ந்திருக்கும் கட்டைவிரல் அழகியும் பட்டனர்.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

" ஏய் எங்கே போகிறாய் ? "என்று கீச்சுக்குரலில் கத்தியது.

வயல் எலியும் தன் பங்குக்கு கீச் கீச் என்று கத்தி தனது அதிருப்தியை தெரிவித்தது.

" போகலாமா ? " என்று கம்பீரமாகக் கேட்டது நீலக்குருவி

" போகலாம் " என்றாள் கட்டைவிரல் அழகி.

நீலக்குருவி சடசடவென தன் சிறகுகளை அடித்து குகைக்குள் ஒருவட்டம் அடித்தது.

கட்டைவிரல் அழகி உடனே பனிக்குகைக்குள் வெளியே செல்லும் வழி இருக்கின்ற இடத்தை நீலக்குருவிக்கு காண்பித்தாள்.

அது அம்புபோல பாய்ந்து சிறிய துளையின் வழியாக நுழைந்து குகைக்குள்ளே இருந்து வெளியே வந்து, மரங்களுக்கு இடையில் பறந்து, ஒரு கிளையில் சென்று அமர்ந்தது.

நீலக்குருவியின் மெல்லிய கழுத்தை தன் விரல்களினால் கெட்டியாகப் பிடித்தபடி அமர்ந்திருந்த கட்டைவிரல் அழகி விடுதலையாகி வந்த சந்தோஷத்தோடு, இயற்கை காட்சிகளைக் கண்டு ரசித்தாள்.

பளபளக்கும் வெயில், காற்றில் ஆடும் மலர்கள், பறவைகளின் குரல்கள், வண்டுகளின் ரீங்கார ஓசை, தழுவிச் செல்லும் குளிர்ந்த காற்று ஆகியவை கட்டைவிரல் அழகிக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது.

"பெண்ணே, நீ எனக்கு உயிர் கொடுத்தாய். அதற்கு நன்றியாக உன்னை அந்த இருட்டுக் குகையில் இருந்தும், குருட்டு எலிகளிடம் இருந்தும் விடுவித்து விட்டேன். வானவெளியில் ஆடிப்பாடி இரைதேட வேண்டும் நான். நீ இங்கே இறங்கிக் கொள்கிறாயா ? அல்லது என்னுடன் வேறு ஒரு இடத்திற்கு வருகிறாயா ? " என்று கேட்டது நீலக்குருவி.

Tamil Children's Moral Story

vennu srinivasan

Mail id : vennu_srinivasan@yahoo.com

" நான் என் பெற்றோரிடம் செல்ல விரும்புகிறேன். அந்த இடத்தில் என்னை விட்டு விடுகிறாயா ? " என்றாள் கட்டைவிரல் அழகி.

" அப்படியே செய்கிறேன் " என்ற நீலக்குருவி மிக வேகமாக வானத்தில் பறந்தது.

கீழே தெரியும் காடுகளையும், மேலே தெரியும் நீல வானத்தையும் பார்த்து ரசித்தபடியே சிலுசிலுக்கும் காற்றில் நீலக்குருவியின் கழுத்தை கட்டிக் கொண்டு தன் பெற்றோர் இருக்கின்ற இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள் கட்டைவிரல் அழகி.